செ.வெ.எண். 30

நாள். 11.04.2017

## பத்தரிக்கைச் செய்தி

### திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் பத்திரிக்கைச் செய்தி
### தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 13.04.2017 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. அதுசமயம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தனியார் நிறுவனங்களின் வேலையளிப்போர் திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரிடையாக வருகை தந்து தங்களது நிறுவனங்களுக்கு தேவையான தகுதியுள்ள நபர்களை தேர்வு செய்யவுள்ளனர். தனியார் வேலைவாய்ப்பு முகாமில் எஸ்எஸ்எல்சி, பிளஸ்2, பட்டப்படிப்பு, ஓட்டுநர்கள், Soft Skill, டிப்ளமோ, ஐடிஐ, மற்றும் கணினி பயிற்சி கல்வித்தகுதியுடைய பதிவுதாரர்கள் கலந்து கொள்ளலாம்.

13.04.2017 அன்று திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ள தனியார் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள **திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பதிவுதாரர்கள் மற்றும் தனியார் நிறுவன பிரதிநிதிகள்** 13.04.2017 அன்று **பிற்பகல்** 03.00மணிக்கு திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வருகைதந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தனியார் துறையில் வேலைக்கு தேர்வு செய்யப்படும் பதிவுதாரர்களது **வேலைவாய்ப்பு பதிவுமூப்பு விவரங்கள் இரத்து செய்யப்படமாட்டாது** எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள தனியார் நிறுவனங்கள் தங்களது தேவை விவரங்களை திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ உடன் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தனியார் வேலைவாய்ப்பு முகாம் **ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் திருநெல்வேலி** மாவட்ட **வேலைவாய்ப்பு அலுவலகத்தால் தவறாது நடத்தப்படும்** என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. இப்பணி முற்றிலும் இலவசமானது.

**TNSDC:**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் **பெயர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு **செய்யப்படுகிறது.**

**TNUSRB & TET:**

தமிழ்நாடு சீருடைப பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் அறிவிக்கப்பட்ட காவலர், சிறைக் காவலர், தீயணைப்பாளர் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் தகுதி தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் மாவட்ட **வேலைவாய்ப்பு அலுவலகம், திருநெல்வேலியில்** நடைபெறும் **இலவச பயிற்சி** வகுப்பில் சேர்ந்து கொள்ள தெரிவிக்கப்படுகிறார்கள்.

**காவலர் மற்றும் சிறைக் காவலர் பயிற்சி வகுப்புகள் சங்கரன்கோவில் மனோ கலை கல்லூரியிலும்** நடைபெறுகிறது. அப்பகுதியில் உள்ள இத்தேர்விற்கு விண்ணப்பித்துள்ளவர்கள் அக்கல்லூரியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் நடத்தப்படும் இவ்விரண்டு பயிற்சி வகுப்பிலும் சேர்ந்து பயன் பெற தெரிவிக்கப்படுகிறார்கள்.

இத்தகவலை **திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்** தெரிவிக்கிறார்.

10.4.17

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி-9.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி